| | | |
|---|---|---|
| சாட்சி : PW2<br>கவாஸ்கர் | அ.வ.எண். 65/2020 | 11.08.2025 |

<u>4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வழக்கு தாக்கல் செய்துள்ள பாலனை எவ்வவு வருடமாக தெரியும் என்றால் நான் பிறந்தது முதல் தெரியும். எனக்கு அவர் சித்தப்பா ஆவார். 4ம் பிரதிவாதியை உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். உங்கள் பிரமாண வாக்குமூலத்தை யார் தயார் செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் உங்களுக்கு சாட்சி சொல்ல சொல்லி நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் வந்ததா என்றால் இல்லை. உங்கள் சித்தப்பா தான் சாட்சி சொல்ல அழைத்து வந்தார் என்றால் இல்லை வழக்கறிஞர் அழைத்தார் நான் விவரம் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வா.சா–ஆ.2 ஆவணம் யாரால் தயார் செய்யப்பட்டது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். அதே போல் அது எங்கு தயார் செய்யப்பட்டது என்பதும் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.2 ஆவணத்தில் உங்களுக்கு தெரிந்து அடித்தல், திருத்தல் இருந்ததா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் பழனிச்சாமி, முத்தமிழ் செல்வன், செல்வராஜ் ஆகியோர்கள் எங்கு வைத்து கையொப்பம் செய்தார்கள் என்று உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் பாலன் வீட்டின் வைத்து கையொப்பம் செய்தார்கள். நீங்கள் பாலன் வீட்டிற்கு போகும் போது மேற்படி மூவரும் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். நீங்கள் பாலன் வீட்டிற்கு போகுவதற்கு முன்னே அவர்கள் என்ன பேசி கொண்டார்கள் என்பது உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல, அதற்கு முன்பே பேசினார்கள் நான் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டேன். அவர்களுக்குள் எத்தனை முறை பேச்சு வார்த்தை நடந்தது என்றாலும், நீங்கள் எத்தனை முறை கலந்து

கொண்டீர்கள் என்றால் இரண்டு முறை நடந்தது.

3) இரண்டு முறையும் நீங்கள் உடனிருந்தீர்கள் என்றால் சரிதான். பழனிச்சாமி, முத்தமிழ் செல்வன் ஆகியோர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தை 4ம் பிரதிவாதிக்கு விற்பதாக 2008 ம் ஆண்டிலேயே எழுதி கொடுத்து முன் பணம் பெற்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. பழனிச்சாமி, முத்தமிழ் செல்வன் ஆகியோர்கள் ஒத்து கொண்டதன் படி 4ம் பிரதிவாதிக்கு இடத்தை எழுதி கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பான விவரத்தை சாட்சி சொல்வதற்கு முன்பு தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. மேற்படி விவரத்தை எப்போது தெரிந்து கொண்டீர்கள் என்றால் நீங்கள் சொல்லி தான் எனக்கு தெரியும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் முதல் பக்கத்தில் தொகை மற்றும் விஸ்தீரணம் கையால் எழுதப்பட்டுள்ளதை நீங்கள் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

4) பழனிச்சாமி, முத்தமிழ் செல்வன் ஆகியோர்கள் நிலத்தை தற்போது தர்மராஜ் தான் சாகுபடி செய்துவருகிறார் என்றால் சரியல்ல, பழனிச்சாமி நிலத்தை அவர் சாகுபடி செய்துவருகிறார், முத்தமிழ் செல்வன், செல்வராஜ் இடத்தை தர்மராஜ் சாகுபடி செய்துவருகிறார். வா.சா.ஆ.2 ஆவணம் எழுதப்பட்ட விவரமோ, அது தொடர்பாக பேச்சு வார்த்தை நடந்த விவரமோ உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. உங்கள் சித்தப்பா வாதி பாலன் கேட்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. பழனிச்சாமி, முத்தமிழ் செல்வன், ஆகியோர்கள் நிலத்தை 4ம் பிரதிவாதி தான் தற்போது வரை விவசயாம் செய்து வருகிறார்கள் என்ாறலும் நீங்கள் அதனை தெரிந்து கொண்டு வேண்டுமென்றே பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ.2 ஆவணத்தை பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்பதால் தான் அதில் கையால் எழுதப்பட்ட விவரம் உங்களுக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. உங்களுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.